www.tamilarangam.net


# தமிழீழ தகவல் நடுவம்

**THAMILEELAM INFORMATION BUREAU**

**BM BOX 1916 LONDON WC1N 3XX**


## செய்திக்கோர்வை நடுவம் - 1

01-01-85 — 15-01-85

* ஓமந்தை புகையிரத வீதிக்கருகில் தமிழர் ஒருவர் சிங்கள இராணுவத்-தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.
* யாழ் மிருசுவிலில் 35 அடி நீளமான புகையிரதபாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.
* மாங்குளம் இராணுவ முகாமில் ஏற்பட்ட தற்செயல் குண்டு வெடிப்புச்சம்பவத்தின் போது, இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் மஜீத்டீன், சார்ஜன்ட் தியாகராஜா என்பவர்கள் கொல்லப்-பட்டுள்ளார்கள்.
* யாழ் நகரில் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு வரிசையில் நின்ற எஸ். சிவராசாவும் அவரது 10 வயது மகனும் சிங்கள இராணுவத்-தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.
* ஓமந்தை தொந்தக்காரன் குளம் பகுதியில் சின்னப்பு யோகராசா 45 வயது, யோகேஸ்வரி 18 வயது, யோகேஸ் 15 வயது, துரையப்பா இரத்தினசபாபதி 26 வயது ஆகியோர் சிங்கள இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.
* சிங்கள இராணுவத்தின் கொடுமை தாங்கமுடியாமல் 20 பெண்கள் உட்பட 52 பேர் இந்திய நாகபட்டினத்தை வந்தடைந்துள்ளார்கள்.
* யாழ் அரசடி வீதியில் 5 தமிழ் இளைஞர்கள் சிங்கள இராணுவத்தின-ரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.
* யாழ் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் சிவஞானவேல் அவர்கள் சிங்கள இராணுவத்தினரால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.
* யாழ் பஸ் நிலையத்தில் 500 தமிழ் இளைஞர்கள் கைது.
* தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு டில்லி வருமாறு கூட்டணித் தலைவர்கட்கு திரு. ஜி. பார்த்தசாரதி அழைப்பு விடுத்துள்ளார்.
* அயல் நாடுகள் தேவைக்கதிகமாக ஆயுதங்கள் இறக்குமதி செய்வது குறித்து இந்தியா கவலை கொள்வதாக இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* மன்னார் வங்காலையில் வண பிதா மேரி பஸ்தியன் உட்பட 8 பேர் தேவாலயம் ஒன்றில் வைத்து சிங்கள இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.
தேவாலயத்தில் இறந்தோரில் அடையாளம் காணப்பட்டோர்.
துரை லூயிஸ் தங்கச்சியம்மா 72 வயது, ரெபஸ் குரூஸ் 22 வயது; துரையப்பு தோமஸ் பீரிஸ் 19 வயது, லிண்டஸ் பீரிஸ் 18 வயது, பெனிஸ் பெல்டோறா 24 வயது.
* சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடமும், அதற்குள் இருந்த வழக்குக் கோவைகளும் எரிக்கப்பட்டுள்ளது.
* யாழ் ஆரியகுளம் சந்தியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆரியகுளம் சந்தியில் இருந்த 15 இலட்சம் ரூபா பெறுமதியான மாடிவீடு ஒன்று சிங்கள இராணுவத்தால் குண்டு வைத்துத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது.
* துரைநாயகம், அல்போன்ஸ் ஆகிய இரு இந்திய தமிழ் மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சித்திரவதை செய்து சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்கள்.
* யாழ் அச்சுவேலியில் மயில்வாகனம் சந்திரபாலன் என்ற 11 வயது சிறுவன் உட்பட 11 பேர் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.
* வடபகுதியில் சில பிரதேசங்கள் ஆள் அரவமற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக பருத்தித்துறை சுப்பர் மடத்தில் இருந்த 71 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு புலோலி சைவப்பிரகாசவித்தியாசாலையில் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்.
* வடபகுதியில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்-துறை வீதிகளில் உள்ள ஆறு மதகுகள் போராளிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டுள்ளது.
* முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலிக அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் 9000 திற்கும் மேற்பட்ட அகதிகள் நோய், பசி, இடநெருக்கடியால் அவதிப்படுகிறார்கள். இவர்களிற்கு சேவைகள் திணைக்களத்தினால் நாளொன்றிற்கு மூன்று வேளை சாப்பாட்டிற்கும் தலா 1 ரூபா 90 சதம் மட்டுமே வழங்கப் படுவதால் சொற்ப உணவாக சோறும் சொதியுமே உண்ண முடிகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்த பணம், வலை, மீன்கள் ஆகியவை கொள்ளையடித்துச் சென்ற சமயம், ஏழு இலங்கை கடற்படை அதிகாரிகள், இந்திய கடற்கரையோ-ர கடல் ரோந்து படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

* கைது செய்யப்பட்டோர் விபரம் :-

லெப்டினன்ட் இணைதிலகா, பிரேமதிலக,
பிரேம்குமார், அதிகாரி, சமித்திரபால,
பிரேமதிலக்கா, பிரேமசேன.

"அண்மைக் காலங்களில் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் உரமாக உயிர் கொடுத்த விடுதலைப் போராளிகளிற்கும் இனவெறி கொண்ட ஸ்ரீலங்கா அரசினால் அநியாயமாக கொல்லப்பட்ட தமிழ் மக்களிற்கும் எமது இதயஅஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்"

"ஒன்றே குலம்! ஒற்றுமையே பலம்!
இதை மறந்தால் நமது நிலம்! வந்தகனை எதிர்த்தே நலம்!"




தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் – தகவற் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்